**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 01ம் நாள் சனிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.134/2020**

**இ.ம.எண்.6/2025**

1) மொ. பொன்னுசாமி (குடும்ப மேலாளர்) ... **வாதி/மனுதாரர்**

**/எதிர்/**

1) தமிழக அரசின் சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர்,

2) வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை உட்கோட்டம்.

3) வருவாய் வட்டாட்சியர், குளித்தலை வட்டம்.

4) சார்பதிவாளர், குளித்தலை, கரூர் மாவட்டம்.

5) கிளை மேலாளர், சிட்டி யூனியன் பேங்க், திம்மாச்சிபுரம்

6) ராசு

7) ரா. பொன்னுசாமி ...**பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள்**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 15.10.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.பாலகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜாராகாத காரணத்தால் அவரை தோன்றாத்தரப்பினராகக்கொண்டும், 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K.S.M. சாகுல் அமீது அவர்கள் முன்னிலையாகியும், 6 மற்றும் 7 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16, விதி 1 மற்றும் 2 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் குளித்தலை வட்டாட்சியர் மற்றும்

குளித்தலை பதிவறை எழுத்தர் ஆகியோரை, மேற்படி வழக்கில் ஆவணங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** கற்றறிந்த 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர், 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை இல்லை என்றும், இம்மனுவை 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாமல் அனுமதிக்கலாம் என்று குறிப்பு செய்துள்ளார்.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

**3)** வழக்கு சொத்து தொடர்பாக குளித்தலை வட்டாட்சியர் மற்றும் குளித்தலை பதிவறை எழுத்தர் ஆகியோரை இவ்வழக்கில் வழக்கு ஆவணங்களுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றம் மூலம் சாட்சி அழைப்பாணை அனுப்ப வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாகிறது. மனுவில் கண்டுள்ள ஆவணங்களுடன் இந்நீதிமன்றத்தில் மேற்படி சாட்சிகள் சாட்சியம் அளிக்க வர வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாகிறது. எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம்:</u>**

**4)** மனுதாரர் மனு சரியல்ல. மனுதாரர் என்ன காரணத்திற்காக மனுவில் கேட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டுமென்று கூறவில்லை. மேலும், மனுதாரர் கேட்டுள்ள ஆவணங்களுக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் நகல் மனு தாக்கல் செய்து பெறலாம். அவ்வாறு நகல் மனு போட்டு பெறும் ஆதரவுகளுக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து ஆவணங்களை வரவழைக்க சட்டப்படி இயலாது. மனுவில் கூறப்பட்டுள்ள சாட்சிகளை விசாரிக்க இயலாது. இந்த மனு வேண்டுமென்று வழக்கை நடத்தாமல் காலம் கடத்தவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

5) மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

6) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியங்களும் இல்லை.

**<u>தீர்வு:</u>**

7) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், மேற்படி வழக்கை மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக குளித்தலை சார்பதிவக ஆவண எண்.50/2008 ஆவணமானது, பிரதிவாதிகளால் உட்பத்தி செய்து கொண்ட ஆவணம் என்றும், அதனால் அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என விளம்புகை செய்ய விளம்புகை பரிகாரத்திற்காகவும், மற்றும் தாவா சொத்துகளை பொறுத்து பத்திர பதிவுகள் மற்றும் வில்லங்கம் ஏற்படுத்துவதன் மூலம் பிரதிவாதிகள் வாதிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிகிறது.

8) மேற்படி வழக்கில், மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 மற்றும் சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் குளித்தலை வட்டாட்சியர் மற்றும் குளித்தலை பதிவறை எழுத்தர் ஆகியோர்களை மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்ய அழைப்பாணை அனுப்ப வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மனுதாரரின் மனுவை பரிசீலனை செய்ததில், தாவா சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தளிஞ்சி கிராமத்தில் உள்ள பட்டா எண்.44க்கு கட்டுப்பட்ட புல எண்களை பொறுத்து, நிலபுல வரைபடம், HSD பட்டாதாரர் விபரம், "ஆ" பதிவேடு, நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு உள்ள பட்டா மற்றும் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பின்பு உள்ள பட்டா விபரங்கள், மற்றும் பட்டா மாறுதல் உத்தரவு ஆவணங்கள் ஆகியவற்றுடன் சாட்சியம் அளிக்க, மேற்படி சாட்சிகளை இந்நீதிமன்றத்தில் அழைக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிகிறது. மாறாக, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர் சரியான காரணங்கள் எதுவும் இம்மனுவில் கூறவில்லை என்றும், மேலும் மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வட்டாட்சியர் அலுவலகத்தில் நகல் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும், இம்மனு வேண்டுமென்றே வழக்கை நடத்தாமல் காலம் கடத்தவே தாக்கல் செய்துள்ளதாகவும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

10) 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளதுபோல், மனுதாரர் அவரது மனுவில் மேற்படி ஆவணங்களை பொறுத்து சாட்சியம் அளிக்க குளித்தலை வட்டாட்சியர் மற்றும் குளித்தலை பதிவறை எழுத்தர் ஆகியோரை விசாரணை செய்ய சரியான காரணங்கள் எதுவும் கூறவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், வாதி தரப்பில் முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவரது முதல் விசாரணையில் தாவா சொத்தை பொறுத்த தற்போதைய பட்டா எண்.1345 மொட்டையன் பெயரிலிருந்து பொன்னுச்சாமி பெயருக்கு கடந்த 27.01.2023 அன்று, உத்தரவின் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி உத்தரவிற்கான கோப்புகள் அலுவலகத்தில் உள்ளதாகவும், கோப்புகளை பார்த்தால்தான் தெரியும் என்றும் மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் தாவா சொத்துகளின் அமைப்புகள் குறித்து கிராம நிர்வாக அலுவலருக்குத்தான் தெரியும் என்றும், வருவாய்துறை ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் பராமரிப்பில் இருக்கிறது என்றும், அவரை விசாரித்தால்தான் முழுவிபரமும் தெரியும் என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

11) மேலும், குளித்தலை கிராம நிர்வாக அலுவலரை, வாதி தரப்பில் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவரது முதல் விசாரணையில் தாவா சொத்தைப் பொறுத்த பட்டா மாறுதல் உத்தரவு பதிவறையில் தேடிப் பார்த்ததில் கிடைக்கப்பெறவில்லை என்று பதிவறை எழுத்தர் சமர்பித்த கடிதத்தின்பேரில்தான் கூறிவருவதாகவும் கூறி, மேற்படி பதிவறை எழுத்தர் இதுசம்மந்தமாக கொடுத்த கடிதத்தினை சா.சா.ஆ.2 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி சா.சா.ஆ.2 ஆவணமானது, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஆவணத்தில் தேதி மற்றும் முத்திரை ஆகியவை இல்லை என்றும் அது உயிருடன் இருக்கும் நபர் கொடுத்த ஆவணம் என்பதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் கூறி ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.2 தனது முதல் விசாரணையில், பதிவறை எழுத்தர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கோப்புகள் பற்றி பதிவறை எழுத்தருக்குத்தான் தெரியும் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்.

12) மேற்படி வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா சொத்தைப் பொறுத்து சாட்சியம் அளிக்க வந்த மேற்படி சாட்சிகள், தாவா சொத்தைப் பொறுத்த வழக்கு கோப்புகள் அனைத்தும் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளதாகவும், தாவா சொத்தைப் பொறுத்த பட்டா மாறுதலுக்கான உத்தரவு வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளதாகவும், ஆனால் பட்டா மாறுதல் உத்தரவு பதிவறையில் தேடிப் பார்த்ததில் கிடைக்கப்பெறவில்லை என்றும், மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு பதிவறையில் கிடைக்கப்பெறாததைப் பொறுத்து பதிவறை எழுத்தர் சமர்பித்த கடிதத்தை தாக்கல் செய்தும் சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி பட்டா மாறுதல் உத்தரவுகள் மற்றும் தாவா சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்கள் ஆகியவற்றின் உண்மை நிலவரம் கண்டறியும் பொருட்டு, மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது தெரியவருகிறது.

13) மறுபுறம், 1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என்று 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் குறிப்பு செய்துள்ளார். இதுமட்டுமல்லாமல், 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையில், இம்மனுவை அனுமதிப்பதில் எவ்வித குறிப்பிட்ட ஆட்சேபனையும் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

தாவா சொத்துகளைப் பொறுத்து சில ஆவணங்கள் கிடைக்கப்பெறாத நிலையில், அதனை பராமரிக்கும் அலுவலர்களான குளித்தலை வட்டாட்சியர் மற்றும் குளித்தலை பதிவறை எழுத்தர் ஆகியோரை வாதிகள் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்க வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிகிறது. மேற்படி, சாட்சிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்து, மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை பொறுத்து விசாரணை செய்வதால், மேற்படி வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களை தீர்மானிக்க அவை அவசியமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்டமும் குந்தகமும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மாறாக, எதிர்மனுதாரர்கள் மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும், அவர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஆட்சேபனை செய்யவும் எல்லா வகையிலும் உரிமை உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

<u>முடிவு:</u>

முடிவாக, இம்மனுவானது மேற்சொன்ன காரணங்களுக்காக செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் தேதியாகிய இன்று என்னால் அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA — Digitally signed by YUGHATHY MARIYA Date: 2025.11.01 16:23:19 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA — Digitally signed by YUGHATHY MARIYA Date: 2025.11.01 16:23:26 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**